பக்கங்கள் 12

# உதயன்

பதிப்பு
விலை: ரூபா.
சுடர் 28
கதிர் 140
வள்ளுவர் ஆண்டு 2044
சித்திரை 2, திங்கள் 15.04.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

32°c / 28°c

## உதயன் மீதான தாக்குதல்

# நம்பகரமான விசாரணை: அமெரிக்கா வலியுறுத்தல்



ஏப்ரல் 3 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள 'உதயனின்' கிளைப் பணி மனை மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலையும் அமெரிக்கா கண்டித்திருந்தது.

கொழும்பு, ஏப்ரல் 15

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக நம்பகரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பொதுசன விவகாரத் தலைமை அதிகாரி கிறிஸ்தோபர் ரீல் தனது 'டுவிட்டர்' இணையத்தில் வெளியிட்டுள்ள நிலை தகவல் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'உதயன்' மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா பெரிதும் கவலையடைந்துள்ளது.

எனவே இலங்கை அரசும், அதிகாரிகளும் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். இதன் ஓர் அங்கமாக உதயன்

பார்க்க பக்கம் 02

## ஊடகத் தாக்குதல் குறித்து ஐ.நா. விசாரிக்க வேண்டும்

### நாடு கடந்த அரசு கோரிக்கை

கொழும்பு, ஏப்.15

இலங்கையில் ஊடகத்துறையினர் மீதும் - குறிப்பாக உதயன் பத்திரிகைஅலுவலகம் மீதும்-நடத்தப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்கள் குறித்தும், விசாரிக்க ஐ.நா. மனித உரிமைகள் சபை சிறப்புக் கூட்டம் ஒன்றுக்கு உடனடியாக அழைப்பு விடுக்க வேண்டும் இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து நாடுகடந்த தமிழீழ அரசின் ஊடகத் துறை அமைச்சரான சுதன் ராஜ், சமர்ப்பித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் 'உதயன்' தமிழ் பத்திரிகை அலுவலகம் நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாத மூன்று நபர்களால் துப்பாக்கி முனையில் தாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக அந்தப் பத்திரிகையின் அச்சுஇயந்திரப் பகுதி செயற்பட முடியாதளவுக்கு முழுமையாகச் சேதமடைந்தது.தமிழர் தாயகத்தை தற்போது சிங்களப் படைகள் முழுமையாக ஆக்கிரமித்துள்ளன.

இந்த நிலையில் அங்கு 4 பொது மக்களுக்கு ஒரு சிப்பாய் என்ற சூழ்நிலையே காணப்படுகிறது. இத்தகைய இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ள பகுதிகளில் வெளிவரும் ஊடகங்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் சிங்கள அரசே உள்

பார்க்க பக்கம் 02

ராஜீவ் கொலை வழக்கு

## மரண தண்டனையை நிறுத்த தீர்மானத்தை நிறைவேற்றுக

### தமிழக அரசுக்கு கருணாநிதி கோரிக்கை



கொழும்பு, ஏப்.15

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை நிறுத்தக் கோரி, தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்றை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மு.கருணாநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 02

## கைவிட்டன பஸ்கள்; புதுவருடத்தில் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம் ஏப்.15

தமிழ் புத்தாண்டு தினமான நேற்று தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்கள் சீராக போக்குவரத்தில் ஈடுபடாமையால் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகினர்.

நேற்றைய தினம் வழமை போன்று தனியார், இ.போ.ச. பஸ் சேவைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், சேவையில் ஈடுபட்ட பஸ்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தன. இதனால் யாழ். நகரப் பகுதியில் இருந்து வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்காக மணிக் கணக்கில் காத்திருந்தே மக்கள் பயணிக்க வேண்டியிருந்தது. ஏராளமானோர் ஓட்டோ, வாடகை வாகனங்கள் என்பவற்றின் மூலமே செல்ல வேண்டிய இடத்துக்கு பயணித்தனர்.

வழமையான நாள்களில் நீயா, நானா என்று போட்டியிட்டபடி பயணிகளை வலிந்து ஏற்றும் தனியார், இ.போ.ச. பஸ்கள் நேற்று பல இடங்களில் பயணிகள் கைகாட்டி மறித்தபோதும் ஏற்றாமல் சென்றதாகவும் பயணிகள் விசனத்துடன் தெரிவித்தனர். (ங)

## சீனாவின் வரிச்சலுகைக்கு இலங்கை தீவிரமான முயற்சி

கொழும்பு, ஏப்.15

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நிறுத்தியதால் ஏற்பட்ட இழப்பீட்டை ஈடுசெய்யும் வகையில் சீனாவிடம் இருந்து ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை பெற்றுக்கொள்ள இலங்கை அரசு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. சீனாவுக்கு விரைவில் பயணம் செய்யவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் புதிய அதிபரிடம் இது குறித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

பொறுப்புக்கூறல் விவகாரம் மற்றும், பொருளாதார வீழ்ச்சி என்பனவற்றால், இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், சீனாவிடம் இருந்து மேலதிக உதவிகளைக் கோருவதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனா செல்லவுள்ளார். குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இழப்பினால், இலங்கையின் ஏற்றுமதி வீதம்

பார்க்க பக்கம் 02

## காய்ச்சலால் 3 மாத சிசு சாவு

யாழ்ப்பாணம், ஏப்.15

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மூன்று மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மதியம் சேர்க்கப்பட்டுள்ளது.

முழங்காவில் நாச்சிக்குடாவைச் சேர்ந்த அன்ரனி குயின் றெக்சன் என்ற 3 மாத ஆண் குழந்தையே இவ்வாறு இறந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

குறித்த குழந்தை காய்ச்சலால் பீடிக்கப்பட்டதால் முழங்காவிலில் உள்ள வைத்தியசாலை ஒன்றில்

பார்க்க பக்கம் 02

## ஷிராணி பதவி நீக்கம் சட்டவிரோதச் செயல்

### சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.15

இலங்கையில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பணி நீக்கம் செய்யப்பட்டமை சட்டவிரோதமான செயல் என்று சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் அண்மைய அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பணி நீக்கம் செய்யப்பட்டதன் மூலம் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான மக்கள் நம்பிக்கை வலுவிழந்துள்ளது.பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத்

பார்க்க பக்கம் 02

### மடுப் பிரதேச செயலர் பிரிவின் கீழ்

## காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை

வவுனியா, ஏப்.15

மடுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முள்ளிக்குளம், இரணை இலுப்பைக்குளம் பகுதியில் வசிக்கும் சுமார் 160 குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காணி ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரணை இலுப்பைக்குளம் பகுதியானது மடுப் பிரதேச செயலகத்திலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இந்தப் பகுதிக்கு இதுவரை போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் பெருமளவான பணத்தை செலவிட்டு தனியார் வாகனங்களிலேயே போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதி மக்கள் குடியிருக்கும் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் இல்லாமையால் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற உதவித் திட்டங்களும் கிடைக்காது போகின்றது.

இவ்வாறான பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதிக்குச் சென்ற வடமாகாண காணி ஆணையாளர், காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்பு விடுத்திருந்தார்.

**காணி அனுமதிப் பத்திரங்கள் நடமாடும் சேவை மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்**

அதனை அடுத்து வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த குடியேற்ற அலுவலர்கள் கடந்த சில நாள்களாக இந்தப் பகுதிக்குச் சென்று அங்கு குடியமர்ந்துள்ள மக்களின் விவரங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பணி நிறைவடைந்ததும் மக்களுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் நடமாடும் சேவை மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக் கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-400)

### வெளிநாடுகளிலிருந்து

## திருப்பி அனுப்பப்பட்டோருக்கு புனர்வாழ்வுச் செயற்திட்டம்

### ஐ.ஓ.எம். நிறுவனம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வுச் செயற்திட்டங்களை சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பு (ஐ.ஓ.எம்) மேற்கொண்டு வருகிறது - இவ்வாறு குறித்த நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் வி.வரதபரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

குடும்பப் பொருளாதாரத்தை சீர்செய்ய வெளிநாடுகளுக்குச் சென்று திருப்பி அனுப்பப்பட்ட நிறையப் பேர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ளனர். இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும்போது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாமல் உளரீதியாக பாதிப்படைகின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் பெருமளவில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் இளைஞர்களாகவும், குடும்பஸ்தர்களாகவும் உள்ளனர். எனவே இவர்களுக்குக் கைகொடுக்கும் செயற்திட்டங்களை ஐ.ஓ.எம். நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

தற்போது இதற்கான செயற்திட்டங்கள், உள ஆலோசனைகள், பயிற்சிகள், தொழில் முயற்சிகளுக்கான கடன் உதவிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ங-14)



நேற்று நடைபெற்ற தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வின் போது பாற்சோறு உண்டு கொண்டாடி மகிழ்ந்த ஜனாதிபதி குடும்பத்தினர்.

## தென்னிலங்கை வியாபாரிகளால் புதுவருடத்தில் முதலுக்கே மோசம்

யாழ்ப்பாணம், ஏப்.15

வழமையை விடவும் இந்த வருடம் புதுவருட வியாபாரத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு அதிகளவான தென்னிலங்கை வர்த்தகர்கள் வந்தமையால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக குடாநாட்டு வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

சித்திரைப் புதுவருட வியாபாரத்துக்காக குடாநாட்டு வர்த்தகர்கள் அதிகளவான உடுபுடவைகளை இறக்கு மதி செய்திருந்தனர். ஆயி னும் சித்திரைப் புதுவருடத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே பெருமளவில் வந்த தென்னிலங்கை வர்த்தகர்கள் கிராமம் கிராமமாகவும், நகர்ப் பகுதிகளின் பிரதான இடங்களிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இதனால் பொதுமக்கள் உடுபுடவைகளின் தரத்தைக் கூட கவனத்தில் கொள்ளாமல் தென்னிலங்கை வியாபாரிகளிடம் குறைந்த விலையில் உடு புடவைகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

இதன் காரணமாக குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் வியாபார நடவடிக்கைகள் சோபையிழந்தன. எதிர்பார்த்தபடி வியாபாரம் நடைபெறாத காரணத்தால் இறக்குமதிக்காக முதலிட்ட பணத்தைக் கூடத் திரும்பப் பெறமுடியாத நிலை குடாநாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (ங-14)

### பாடகர் ஸ்ரீனிவாஸ் காலமானார்



யாழ்ப்பாணம்,ஏப்.15

தென் இந்தியத் திரைப்பட பின்னணிப் பாடகர் பி.பீ.ஸ்ரீனிவாஸ் நேற்று ஞாயிற்றுக் கிழமை சென்னையில் காலமானார்.

கடந்த சில தினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் நேற்று மாரடைப்பினால் உயிரிழந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு உட்பட 12 மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ள இவர் தனது 82 ஆவது வயதில் காலமானார்.

தென்னிந்திய பழம்பெரும் நடிகர்களான எம்.ஜீ.ஆர். சிவாஜிகணேசன் ,ஜெமினி கணேசன் போன்றோரின் திரைப்படங்களில் இவர் பின்னணிப் பாடல்களை பாடியிருந்தார். (ங-16)

## பதிவு செய்யப்படாத வாகனங்கள் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஏப்.15

பதிவுகள் செய்யப்படாத மற்றும் புகையூட்டப்பட்ட கண்ணாடிகளைக் கொண்டுள்ள வாகனங்களைக் கைப் பற்றி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக புதிய வாகனமொன்று பத்துத் தினங்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்யப்படாத வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்படும் என்ற தீர்மானம் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவுகளின் ஊடாக அரசியல்வாதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

**பத்துத் தினங்களுக்குள் பதிவு செய் யப்பட வேண்டும்.**

கடந்த இரு வாரகாலத்துள் மாத்திரம் பதிவு செய்யாது செலுத்திச் செல்லப் பட்ட ஐம்பது வாகனங்கள் வரையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு சட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (ஐ-22)

### ஊடகத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளது என்பது தெள்ளத்தெளிவான உண்மை. இலங்கையில் தமிழ் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகத் துறையின் மீதான தொடர் தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பன அதிகரித்துள்ளன. எனவே அவை குறித்து விசாரிக்க உடனடியாக சிறப்பு கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். - என்றுள்ளது. (ங)

### மரண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மூவரின் மரண தண்டனையையும் நிறுத்துமாறு தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்றை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். அந்த தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் அது குறித்து தமிழக ஆளுநருக்கு தெரியப்படுத்துவதன் ஊடாக, தூக்குக் கயிற்றில் ஊசலாடிக்கொண்டிருக்கும் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவரின் உயிர்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் குறித்த மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்யும் உத்தரவை பிறப்பிக்க முடியாது என்று இந்திய உயர் நீதிமன்றம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

### சீனாவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கணிசமாகக் குறைந்துள்ளது.

இந்த நிலையில், சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கும், நலிந்து வரும் ஆடை ஏற்றுமதித் துறையை காப்பாற்ற சீனாவின் ஜி.எஸ்.பி. சலுகையைப் பெறுவதற்கும் இலங்கை தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

இதுதொடர்பாக இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் ஆரம்பக்கட்டப் பேச்சுக்களும் நடத்தப்பட்டு, வரிச் சலுகை வழங்குவதற்கு சீனத்தரப்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனினும் இது குறித்து, இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் போது, இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் நம்பப்படுகிறது. (ங)

### காய்ச்சலால்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிகிச்சை வழங்கப்பட்டது. அதன் பின்னர் அந்தக் குழந்தையுடன் வைபவம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக பெற்றோர் பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

எனினும் திடீரென சுமார் அரை மணி த்தியாலமாகக் குழந்தை உணர்விழந்த நிலையில் இருந்ததால் பதறிப்போன பெற்றோர், உடனடியாக குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மதியம் சேர்ப்பித்தனர். எனினும் அங்குமேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது குழந்தை உயிரிழந்து விட்டமை தெரியவந்தது. குழந்தை இறந்தமைக்கான காரணம் குறித்து பரிசோதனைகள் இன்று நடைபெறவுள்ளது. (ங-4)

### ஷிராணி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தீர்மானத்தை இலங்கை அரசு திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்.நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையும், சட்டத் துறையின் மீதான மக்கள் நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் வகையிலேயே ஒரு நாட்டின் அரசு செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ங)

### நம்பகரமான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து நம்பகரமான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும். - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஏப்ரல் 3 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள உதயனின் கிளைப் பணிமனை மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலையும் அமெரிக்கா கண்டித்திருந்தது. இது போன்ற ஊடகங்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் தொடரவிடாது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசை அமெரிக்கா கோரியிருந்தது. எனினும் அவ்வாறு அமெரிக்கா அறிக்கை விடுத்து ஒருவாரம் கழிவதற்கிடையில் - 10 நாள்களின் பின்னர் - உதயனின் தலைமைப் பணிமனை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, பிரதான அச்சிடும் இயந்திரம் செயற்பட முடியாதளவுக்கு சேதமாக்கப்பட்டிருந்தது.

ஊடகங்கள் மீதான தாக்குதலை தடுக்குமாறு அமெரிக்கா விடுத்திருந்த வேண்டுகோளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறியிருந்த நிலையிலேயே உதயன் மீதான தாக்குதல் தொடர்பாக நம்பகரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தனது கருத்தை அமெரிக்கத் தூதரக அதிகாரி வெளியிட்டுள்ளார்.

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com




## வட மாகாண தேர்தலை நடத்த இழுத்தடிப்பு இனியும் வேண்டாம்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அங்கு சுதந்திரமான அரசியல் செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமைக்கு அமர்த்தப்பட வேண்டும். அவர்களுடன் பொதுநலவாய நாடுகள் ,தேசிய ஜனநாயக நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களும் இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளார், நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தலுக்கான இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்

வடக்கில் சுயாதீனமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இப்போது இல்லை. மாணவர்கள், அரசியல் தலைவர்கள்,மற்றும் கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் அதனையே எடுத்துக் காட்டுகின்றன

ஊடகவியலாளர்கள், பத்திரிகை அலுவலகங்கள், பத்திரிகைப் பணியாளர்கள் தாக்கப்படுவதும் சுதந்திரமான தேர்தலுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதும் இவற்றுடன் சேர்க்கப்பட வேண்டும்.

சுதந்திரமான தேர்தலுக்குச் சாவு மணி அடிக்கும் முயற்சிகள், தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாவதற்கு முன்னரே ஊடக சுதந்திரத்தை முடக்கி விடும் முனைப்புகள் மேலெழுந்து வருகின்றன.

அவற்றை ஒழிப்பதில், தடுப்பதில் முக்கிய, உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க அரசாங்கத்தையே சார்ந்தது.

வட மாகாண சபைக்கான தேர்தல் ஏற்கனவே காலம் தாழ்த்தப்பட்டு விட்டது. மக்களை- வாக்காளர்களை - தனது பக்கம் சாய்ப்பதற்கான உள்ளார்ந்த திட்டங்களுடன் அரசு அதனை தாமதித்து வருகிறது என்பது இரகசியமன்று.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தான் நல்ல பெயர் பெறும் உள்நோக்குடன் அனைத்துலக தேர்தல் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டு மிகவும் உயர்ந்து எழுந்தது.

அதனால், அத் தேர்தல் முழுமையான கண்காணிப்பாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் மிக அதிகமாக உள்ளது- என்ற குற்றச்சாட்டை அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஒப்புக்கொண்டுள்ளமையும் இத் தருணத்தில் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும். அவர்கள் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனைத் தடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கருத்துத் தெரிவித்து இருக்கிறார்.

அவரது கருத்தும்,வலியுறுத்தலும் 'ஏழை சொல் அம்பலம் ஏறுமா' என்ற கேள்வியை ஒத்த நிலையிலேயே உள்ளது என்பதே உண்மை எனலாம்.

பலப்பல காரணங்களைக் காட்டி வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதனை உத்தியோகபூர்வமாக பின் தள்ளி வந்த அரசு, அதனை எதிர்வரும் செப்ரெம்பரில் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. அத் தேர்தல் விரைந்து நடைபெற வேண்டும் என்பது வடக்கு வாழ் மக்களின் விருப்பமாகவும் உள்ளது.

ஆனால், சுதந்திரமான தேர்தல் ஒன்று நடத்தப்படும் என்பதில் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகமே நிலவுகிறது. அந்தச் சந்தேகத்தை நீக்குவதற்கான அழுத்தங்களை அரசுக்கு கொடுக்க வேண்டிய பணி, நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் மற்றும் ஜனநாயகத்தில் உண்மையான பற்றுள்ள அமைப்புக்களினதும், அனைத்துலக அமைப்புக்களினதும் கடமை எனலாம்.

வடக்கின் இனக் குழுமத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் உள்ளார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்புகள் நிராகரித்து வந்தாலும் அவை குறித்த உண்மை நிலை வெளிப்படுத்தப்படும் என்பது சந்தேகமே.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, வடக்கு மாகாண சபைத் தேர்தலை மேலும் பிற்போடாமலும், சுதந்திரமாகவும் நடத்த அரசு முன்வர வேண்டும். அதனை உரிய பற்றுறுதியுடன் செயற்படுத்தும் மனம் அதற்கு உண்டா?

வன்னிப் பிரதேசத்தில் மக்கள் ஆதரவுள்ள அரசியல் கட்சிகளை அடக்கி, ஒடுக்கி, ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றை நடத்த இயலாது என்பதனை அது உணர்வது எப்போது....?

# காங்கேசன்துறை சிமெந்து ஆலை; மீண்டும் உற்பத்திச் செயற்பாடுகள்

## கூட்டுத்தாபனம் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.15

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் உற்பத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை ஹம்பாந்தோட்டையில் புதிதாக சிமெந்து தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவித்தார். அதன்மூலம் சந்தையில் எந்தவித தட்டுப்பாடுகளும் இன்றி, குறைந்த விலையில் சிமெந்தை வழங்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை கடந்த காலப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டு அதன் உற்பத்தி நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. அந்தநிலையில் மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் குறைந்த விலையில் தரமான சிமெந்தை மக்களுக்கு வழங்க முடியும்.

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து கம்பனி பாகிஸ்தானிலிருந்து சிமெந் தினை இறக்குமதி செய்து லங்கா சிமெந்து மற்றும் காங்கேசன் சிமெந்து என்ற பெயர்களில் அதனை உள்நாட்டில் சந்தைப்படுத்த தீர்மானித்துள்ளது.

தற்போது சந்தையிலுள்ள விலைகளைப் பார்க்க இறக்குமதி செய்யப்பட்ட சிமெந்து குறைந்த விலைகளில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படும் காங்கேசன் சிமெந்து மூடை ஒன்று கொழும்பில் 780 ரூபாவுக்கும் வெளியிடங்களில் 890 ரூபாவுக்கும் கிடைக்கும். இந்த விலைகள் இலங்கையில் சிமெந்து பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டவுடன் மேலும் குறைவடையும். தற்போது வருடாந்தம் 10 மில்லியன் சிமெந்து மூடைகளை இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் விநியோகித்து வருகிறது. இது இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பு செய்கிறது.-என்றார். (ச)

# சர்வதேச நாடுகளுடன் முரண்படக் கூடாது

## எச்சரிக்கிறார் டியூ. குணசேகர

கொழும்பு,ஏப்.15

சர்வதேச நாடுகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. குறிப்பாக இந்தியாவுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அமைச்சர் டியூ.குணசேகர எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிவிவகார மற்றும் பாது காப்பு அமைச்சுக்கள் புத்தியுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக அமைச்சின் பேச்சாளர்கள் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு கருத்து வெளியிட வேண்டும். பொருத்தமற்ற சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

ஆர்.பிரேமதாச, ஜே.ஆர்.ஜெயவர்தன போன்ற ஜனாதிபதிகள் இந்தியாவைப் பகைத்துக் கொண்டதனால் ஏற்பட்ட விளைவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வெளிவிவகார மற்றும் பாது காப்பு அமைச்சுக்கள் புத்தியுடன் செயற்பட வேண்டும்.**

சில அடைப்படைவாத சக்திகள் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பகைமைப்படுத்திக் குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

சிங்கள - தமிழ், முஸ்லிம் மக்கள் இடையே பிளவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கப்படுகின்றது.

இதன் மூலம் வெளிநாட்டு சக்திகள் நாட்டின் விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடிய சாத்தியம் ஏற்படும்.-என்றார். (ச)

## தரச்சான்றிதழ் பரிசீலணை

கொழும்பு,ஏப்.15

இலங்கை தரநிர்ணய சபையினால் வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழ் தொடர்பில் பரிசீலனை செய்ய நடவ்டிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கணக்காய்வாளர் எச்.ஏ.எஸ்.சமர வீர தெரிவித்தார்.

தரச் சான்றிதழ் வழங்கும் முறைமை, சான்றிதழ் வழங்கியதன் பின்னர் பின்பற்றும் முறைமை தொடர்பில் இதன் போது ஆராயப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

தரச் சான்றிதழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானது என்பதால் நிறுவனங்கள் சான்றிதழைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், அது தொடர்பில் கையாலும் விடயங்கள் குறித்து ஆராய வேண்டியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்புக் கூற வேண்டியுள்ளமையினால், இதுகுறித்து ஆராய்ந்து தமது வருடாந்த அறிக்கையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் தாதியர் இன்மையால் நெருக்கடி நிலை

யாழ்ப்பாணம், ஏப்.14

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நாளாந்தம் 200 இக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் ஒரு தாதிய உத்தியோகத்தர் கூட கடமையில் இல்லை. இதன் காரணமாக நோயாளர்களுக்கு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி வைத்தியர் இ.கனகரட்ணம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வைத்தியசாலையில் கடந்த 3 மாத காலப்பகுதிக்குள் மட்டும் வெளிநோயாளர் பிரிவில் 2 ஆயிரம் பேரும், விடுதிகளில் 389 பேரும் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் நாளாந்தம் 200 க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

எனினும் நோயாளர் வருகைக்கு ஏற்றால் போல் உரிய ஆளணி வைத்தியசாலையில் இல்லை. தற்போது 3 வைத்தியர்களும் 2 தொண்டர்களும் 7 தொழிலாளர்களும் கடமையில் உள்ளனர். இவர்களில் ஒரு வைத்தியரும், 2 தொழிலாளர்களும் இரவு நேரக் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

இருக்கக் கூடிய ஆளணியைக் கொண்டு முடிந்தளவு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. குறிப்பாக தாதிய உத்தியோகத்தர் எவரும் கடமையில் இல்லை.

இரவு, பகல் கடமைகளுக்கு போதுமானதாக ஆளணி இல்லை. இதனால் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக மந்திகை- சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அவசர நோயாளர்களை அனுப்பி வைக்க ஐ.சி.ஆர்.சி நிறுவனத்துக்குச் சொந்தமான அம்புலன்ஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது வைத்தியசாலைக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றமை தொடர்பாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் ஆளணி வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-14)

## புத்தாண்டுக் கொண்டாட்ட விபத்துக்கள் கொழும்பு ஆஸ்பத்திரியில் 233 பேர்

கொழும்பு,ஏப்.15

கடந்த 24 மணித்தியாலங்களில் திடீர் விபத்துக்களுக்கு இலக்கான 233 பேர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 4 வீத அதிகரிப்பு என்று திடீர் விபத்துக்கள் பிரிவின் தேசிய பயிற்றுவிப்பு அதிகாரி புஷ்பா சொய்ஸா கூறியுள்ளார்.

கடந்த 24 மணித்தியாலத்துக்குள் திடீர் விபத்துக்களுக்கு உள்ளாகிய 106 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதுடன், 126 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

மது போதையில் இடம்பெற்ற விபத்துக்களின்போது காயமடைந்த ஒன்பது பேரும், வீதி விபத்துக்களின்போது காயமடைந்த 45 பேரும், வீடுகளில் இடம்பெற்ற பல்வேறு இடர்களின் போது காயமடைந்த 40 பேரும் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மஹரகம, தலங்கம ஆகிய பிரதேசங்களில் பட்டாசு கொளுத்தும் போது ஏற்பட்ட காயங்களில் இரு இளைஞர்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ச)

# நினைவில் நீங்காத ஓராண்டு நினைவில்

மண்ணில்
09.12.1916
விண்ணில்
26.04.2012



அமரர்
## கணபதிப்பிள்ளை வள்ளியம்மை

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவு
அன்புள்ளம் கொண்ட எம் அன்பான அம்மம்மாவே
காலத்தின் ஒளிவிளக்காய் எம்மோடு இருந்து இன்று
உயிரோடு உயிராய் கலந்து விட்ட அம்மம்மா
கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ
மண்ணைவிட்டு விண்சென்று ஆண்டு ஒன்று ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை மறப்போமா உங்கள் நினைவை
உங்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
வட்டக்கச்சி, கிளிநொச்சி. (36011)(6) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து நடராசா

(வெலிக்கண்டல் கடை நடராசா)



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து நடராசா நேற்று (14.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மங்களத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - கரவெட்டி) அன்புக் கணவரும், அஜந்தன், மனோக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04. 2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (2.6)(27831)

தகவல்:
க. ஜெகதாஸ் (மருமகன்).

## கைதிகளுக்கு ஒரு வார விடுமுறை

சிறைக் கைதிகளுக்கு ஒருவாரகால விடுமுறை மன்னிப்பு வழங்குவதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நன்னடத்தை அடிப்படையில் கைதிகளுக்கு ஒருவார விடுமுறை மன்னிப்பு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறினார்.

ஒருவாரகால விடுமுறை மன்னிப்புக் காலத்தை எதிர்காலத்தில் நீடிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இன்று கைதிகளை பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஷ்குமார் தெரிவித்தார்.

இதற்கமைய உறவினர்கள் கைதிகளுக்கு இனிப்புப் பண்டங்கள் மற்றும் உணவுகளை வழங்குவதற்கும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம்வழங்கப்பட்டுள்ளதுஎன்றுஅவர்மேலும் தெரிவித்தார். (ச)

# சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

கொற்றாவத்தை, அயிட்டியப்புலம் ஸ்ரீ முருகன் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினரால் 14.04.2013 ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் தீபாவளி தினத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
(C/8359)(10.6) இந்து இளைஞர் மன்றம்.

# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை பரராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், புகையிரத திணைக்களம்)

7ஆம் கட்டை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரராஜசிங்கம் 11.04.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், குலசிங்கம் (அமெரிக்கா), விமலன் (கனடா), கபிலன் (லண்டன்), கஜந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தினி, சுபாஜினி, பாமா, சிவானுஜன் ஆகியோரின் மாமனும், இஷானி, இஷான், நிகிஷா, கஜானனன், கார்த்திகன், பிரவீனா, பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னலட்சுமி, தனலட்சுமி, சிவபாக்கியம், இராயேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சின்னத்துரை, இராஜதுரை, செல்வரட்ணம், குமாரவேலு, சுப்பிரமணியம், அன்னம்மா, அன்னலட்சுமி, சரஸ்வதி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 ஆம் கட்டை,
சண்டிலிப்பாய். (36009) (2.6)

தகவல்:
மகேஸ்வரி (மனைவி).

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னையா தங்கம்மா (செல்வமலர்)



தம்பலடி, பொலிகண்டியைச் சேர்ந்த திருமதி சின்னையா தங்கம்மா (செல்வமலர்) 13.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - கனகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் செல்லப்பா சின்னையாவின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) அன்பு மனைவியும் இன்பமலர் (ஆசிரியர்), மதிவதனி (சுவிஸ்), மணிவண்ணன் (சுவிஸ்), சிவச்செல்வி (விரிவுரையாளர்), மயூரன் (வங்கி ஊழியர்) ஆகியோரின் அன்புத் தாயும் சிறிகுமரபரன் (ஆசிரியர்), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர்), தாரணி ஆகியோரின் அன்பு மாமியும் கிருத்திகா, செந்தூரன், நலீனன், மதீனன், சங்கவி, சிறிராம், மதுவந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பலடி, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
0212262626. (சி/8356) (23-6)

தகவல்:
செ.சின்னையா
(கணவர்)

# மரண அறிவித்தல்

## கதிர்காமத்தம்பி இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி)



வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரி) நேற்று (14.04.2013) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனி (கனடா), Dr. ஜெயவதனி (வைத்திய அதிகாரி யாழ். போதனா வைத்தியசாலை), சாந்தி (அமெரிக்கா), கதிர்காம ரூபன் (பொறியியலாளர்-Dialog) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகராஜா(கனடா), சிவநேசன் (பிரதிப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்-வடமாகாணம்), அகிலன் (பொறியியலாளர்-அமெரிக்கா), தயாளினி ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீவன், நிருத்பவன், ஸ்ரீவத்சன், சுபாங்கன், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் இராஜலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தேவராசா மற்றும் பரமேஸ்வரி, கமலானந்தன், கமலினி, கலாநிதி, கருணானந்தன், கலையரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, மாப்பிலவு லேன்,
வதிரி, கரவெட்டி. (C/8360)(10.6)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
T.P:0773597485

# உதயன் மீதான தாக்குதலுக்குப் பல்வேறு அமைப்புகளும் கண்டனம்

உதயன் மீது மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ள தாக்குதல் சம்பவத்தை அடுத்துப் பல்வேறு அமைப்புகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

உதயன் பத்திரிகையின் அலுவலகத்தினுள் நுழைந்த ஆயுததாரிகள் அச்சு இயந்திரப் பகுதிக்குள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அங்கு கடமையில் இருந்தவர்களை விரட்டியடித்தனர்.

அச்சியந்திரத்தின் மீதும், பிரதான மின் பிறப்பாக்கி மீதும் துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத்திய பின்னர் பெற்றோல் ஊற்றி கொழுத்தியுள்ளனர். அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருமளவு பத்திரிகை அச்சிடும் தாள்களையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

காட்டுமிராண்டித்தனமானதும், மிலேச்சத்தனமானதுமான இத்தாக்குதல் சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இராணுவ பிரசன்னமும், இராணுவ கண்காணிப்பு நடவடிக்கைகளும் அதிகமாக உள்ள யாழ். நகரப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் ஆதரவு இல்லாது இவ்வாறான தாக்குதல் ஒருபோதும் நடைபெற்றிருக்க முடியாது.- என்று பொதுச் செயலாளர் எஸ்.கஜேந்திரன் கட்சி சார்பில் அனுப்பி வைத்துள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிவராம் நினைவுப் பணிமன்றம்**

இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராகத் தொடரும் அச்சுறுத்தலின் மற்றொரு அங்கமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் நாளிதழின் அலுவலகம் மீண்டும் தாக்கப்பட்டுள்ளமையை சிவராம் நினைவுப் பணிமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

உதயன் பத்திரிகை வெளிவருவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தத் தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தின் கரங்களே நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்றது என்பதை ஊகிப்பது ஒன்றும் கடினமல்ல.

இன்றுவரை அதிக எண்ணிக்கையில் தாக்குதலுக்கு இலக்கான ஒரு பத்திரிகை நிறுவனம் எனப் பட்டியல் இட்டோமேயானால் அதில் முதலிடம் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கே கிடைக்கும்.

அண்மைக் காலமாக உதயன் நாளிதழுக்கு எதிராகத் தமிழ் மக்கள் மத்தியில் அரச சார்பு சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சேறு பூசும் வகையிலான பிரசாரத் தின் ஒரு அங்கமாகவும் இத்தாக் குதல் கருதப்பட வேண்டும்.

உதயன் நாளிதழ் மீதான தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசிடம் முறையிடுவதாலேயோ அன்றி குற்றவாளிகளைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துமாறு கோருவதாலேயோ பயன் ஏதும் விளையாது என்பது உலகறிந்த உண்மை.

எனவே, இது விடயத் தில் சர்வதேச சமூகமே காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர்களது கண்டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர்**

அச்சு இயந்திரத்தை எரித்தாலும் அச்சமடையான் உதயன் என்று வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரமும் நமது நாட்டில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. உதயன் பத்திரிகையின் அச்சு இயந்திரம் ஆயுதம் தாங்கிய காட்டு மிராண்டிகளால் தாக்கப்பட்டுள்ளமை ஊடக சுதந்திரம் இங்கு முற்றாக மறுக்கப்பட்டுள்ளமையைக் காட்டுகின்றது.

ஜனநாயக நாட்டில் ஊடகவியாளர்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. அவர்கள் பூரண சுதந்திரத்துடன் செயற்பட வேண்டும். ஆனால், நமது நாட்டில் சகல சுதந்திரங்க ளும் அடியோடு மறுக்கப்படுகின்றன.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்போர் இவ்வாறான சம்பவங்களைக் கண்டும் காணாது இருப்பது வேதனை தருகிறது.

உதயன் நிறுவனத்தில் பொலிஸ் பாதுகாப்பு உள்ள போதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது வேதனைதருகிறது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர்**

எத்தகைய தாக்குதலுக்கும் அஞ்சாது துணிந்து செயற்படுபவன் உதயன் என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன் பத்திரிகையின் அச்சு இயந்திரம் ஆயுதம் தாங்கிய குழுக்களால் எரிக்கப்பட்டாலும் அத்தாக்குதல் எவற்றையும் பொருட்படுத்தாது உண்மையை உள்ளவாறு மக்களுக்கு எடுத்தியம்ப உதயன் என்றும் தயங்கான்.

ஊடகவியலாளர்கள் நமது நாட்டில் தற்போது தாக்கப்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் துணிச்சலோடு செயற்படும் ஒரே பத்திரிகை உதயன்தான். உதயன் அடக்குமுறைகளை வெளிக் கொணர்வதால் பலமுறை தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது.

ஜனநாயக நாட்டில் இவ்வா றான சம்பவங்கள் கண்டிக்கப்படத் தக்கவை. மக்களுக்கு - மக்கள் மீதான அநீதிகளுக்கு - நடுநிலை தவறாமல் அவர்களின் அடக்கு முறைகளை உதயன் வெளிக் கொணரத் தவறுவதில்லை. இவ்வாறான சம்பவங்கள் ஊடகசுதந்திரத்தை ஒடுக்குகின்ற செயற்பாடுகளாகும். உரிய வர்கள் குற்ற வாளிகளைக் கண்டு பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண் டும் என்று அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

**வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்**

தமிழர்களின் ஆட்சியை நிர்ணயிப்பவன் உதயனே. அதனால் தான் அதனை ஏற்க முடியாதவர்களால் அச்சியந்திரம் எரிக்கப்பட்டுள்ளது என்று வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் உதயன் பத்திரிகையின் பணி மகோன்னதமானது. போர்க் காலங்களில் குடாநாட்டுப் பத்திரிகைகள் யாவும் இயங்கா நிலையில் நின்ற போது தமிழ் மக்களின் உணர்வுகளை உண்மையாகவும் - நேர்மையாகவும் - நடுநிலை தவறாமல் உதயன் துணிச்சலோடு வெளியிட்டான்.

இவ்வாறான பத்திரிகையின் வளர்ச்சியைப் பொறுக்காத வர்களது செயற்பாடுதான் இது என்று கண்டனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மன்னார் பிரஜைகள் குழு**

'உதயன்' தாக்குதல் தொடர்பில் அரசுக்கு பங்கில்லையாயின் உடனடியாக 'உதயன்' அலுவலகத்துக்கும், ஊழியர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்குவதுடன் இனி வருங்காலங்களில் இவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழு வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளது.

'உதயன்' பத்திரிகை மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நாசகார வேலைகளை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஊடகத்துறைக்கு எதிரான செயல்களை கண்டிப்பதற்கும் மேலும் தொடராமல் இருப்பதற்கும் முழு ஊடகத்துறையினரும் ஒன்றிணைந்த செயலில் இறங்க வேண்டிய சந்தர்ப்பமாக இதனை நாம் கருதுகின்றோம்.

'உதயன்' பத்திரிகை மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் இந்தத் தாக்குதல்கள், அழித்தல் நிகழ்வுகள் தொடர்பில் அரசு விசாரித்ததாகவோ, நடவடிக்கை மேற்கொண்டதாகவோ தெரியவில்லை.

வெறுமனே இந்தத் தாக்குதலுக்கும் தமக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையெனக் கூறிக் கொண்டு தட்டிக் கழித்துவராமல் உண்மையை அரசு கண்டறிய வேண்டும். - என்றுள்ளது.

**தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கைக் கிளை**

இனம்தெரியாத குழுவினர் மிகவும் மோசமான முறையில் வடக்கிலுள்ள உதயன் பத்திரிகையின் தலைமை அலுவலகத்தை தாக்கியுள்ளதுடன் அதன் அச்சு இயந்திரத்துக்கும் தீவைத்துள்ளனர். தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு இதனை வன்மையாக கண்டிக்கிறது.

வடக்கில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு, இனந்தெரியாத நபர்கள் ஊடக வியலாளர்களையும், ஊடக நிறுவனங்களையும் தாக்கிவருகின்றனர்.

இவ்வாறு தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலக்கைக் கிளை வெளியிட்டுள்ள கண்டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்நகரின் மத்திய பகுதியில் இயங்கிவரும் உதயன் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. இருவாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சியிலுள்ள அதன் கிளை அலுவலகமும் தாக்கப்பட்டது.

பத்திரிகைகள் எரிக்கப்படுதல், பத்திரிகை ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல், விநியோக வாகனம் தாக்கப்படுதல், விநியோகஸ்தர்கள் தாக்கப்படுதல் என்று வடக்கில் பத்திரிகைகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன.

இந்த ஆண்டில் மட்டும் இருவாரங்களுக்கு ஒருமுறை வடக்கில் பத்திரிகைகள் தாக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

வடமாகாணம் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் இந்த தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதனை வைத்துப்பார்க்கையில், சில அரசியல் சக்திகள் இந்த தமிழ் பத்திரிகைகளுக்கு எதிராக செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

போரை கையாண்டு அதில் வெற்றிகண்ட பாதுகாப்பு அமைச்சுக்கு இந்த தாக்குதல்களை யார் நடத்துகிறார்கள் என்பதை இதுவரை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் முழு சமுதாயத்தையும் கோபத்துக்குள்ளாக்குவதுடன் நாட்டின் நற்பெயருக்கு கலங்கத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-5)

## நெடுந்தீவுக்கான படகுசேவை கட்டுமானம் நடைபெறுமா?

யாழ்ப்பாணம், ஏப்.15

நெடுந்தீவு பிரதேச சபை நெடுந்தீவுக் கடல் போக்குவரத்துக்கு ஈடுபடுத்தும் நோக்குடன் படகு ஒன்றைக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

எனினும் அது இப்போது சாத்தியப்படுமா என்று சந்தேகம் எழுந்துள்ளது என்று தெரிகின்றது.

கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் ஏற்கனவே இது தொடர்பாக பிரதேச சபை தனது செயற்பாடுகள் குறித்துத் தெரிவித்திருந்த போதும் சமீபத்தில் இங்கு வந்த டொக்யாட் நிறுவன அதிகாரிகள் படகைக் கட்டுவதற்கு கடற்படை அனுமதிக்க வேண்டும் எனவும் அலுமினியத்தில் படகைக் கட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

அலுமினியத்தில் கட்டப்படும் படகு நெடுந்தீவுத் துறைமுகத்துள் வரக் கூடியதாக இருக்குமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

'நெல்சிப்' திட்டத்தின் நிதியுதவியுடன் பிரதேச சபை நெடுந்தீவுக்கான படகைக் கட்டத் திட்டமிட்டிருந்தது.

'நெல்சிப்' திட்டத்தில் இந்தப் படகைக் கட்டுவதற்கு ரூபா இரண்டு கோடி நிதி வழங்கப்படவுள்ளது என்று கூறப்பட்டது. (ம-7)

## சாதாரண தர மாணவருக்கு விசேட வகுப்புக்கள்

பளை, ஏப்.15

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் இவ்வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட கணித பாட வகுப்புக்களையும் பாடசாலை கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான கணினிப் பயிற்சி வகுப்புக்களையும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த பயிற்சி வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு பேரவைத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ம-9)

## பாதையின் கோரத்தால் பயணம் செய்வோர் அவதி

யாழ்ப்பாணம்,ஏப். 15

இணுவில் கந்தசுவாமி கோயில் வீதி திருத்தத்துக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக கற்கள் போடப்பட்ட நிலையில் திருத்த வேலை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. இதனால் வீதியில் பயணங்களை மேற்கொள்வோர் பெரும் இன்னல்களையும், சிரமங்களையும் எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்னர் இந்த வீதியை திருத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதியில் கற்களை கொண்டுவந்து பரவியது.

அதன் பின்னர் எதுவித வேலையையும் மேற்கொள்ளாமல் இடைநடுவில் விட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை காங்கேசன் துறை வீதியிலுள்ள மதகு ஒன்றும் இந்த வீதிக்கு நேராக திருத்த வேலை முடியாது கூரிய கம்பிகள் பொருத்தப்பட்ட நிலையில் உள்ளது.

இந்த மதகில் அண்மையில் பொதுமகன் ஒருவர் இரவு நேரத்தில் வீழ்ந்ததாகவும் தெய்வாதீனமாக காயங்களுடன் தப்பியதாகவும் அந்தப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வீதி முழுவதும் கருங்கற்கள் பரவி இருப்பதால் வீதியால் மோட்டார் சைக்கிளில் செல்வோர் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணிக்கின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனம் எடுத்து இந்த வீதியை உடனடியாகத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## கண்டபடி பனை வெட்டுவதற்கு ஒரு போதும் அனுமதியில்லை

### பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.15

குடாநாட்டில் பனை மரங்களை அளவுக்கதிமாக வெட்டுவதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று பனைஅபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சிவரெட்ணம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் சில இடங்களில் வீதி அகலிப்புக்கு இடையூறாகக் காணப்பட்ட பனை மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டன.

இவை வீதி அகலிப்பு எல்லைக்குள் இருந்த காரணத்தாலேயே அழிக்கப்பட்டன.

தற்போது வீதியோரங்களில் காணப்படும் பனைகளின் ஓலைகளை விஷமிகள் வெட்டிச் செல்கின்றனர்.

இவ்வாறு தேவையற்ற விதத்தில் பனை ஓலைகள் வெட்டுவது, பனை மரம் வெட்டுவது என்பன தவிர்க்கப்பட வேண்டும்.


அபிவிருத்திச் சபையின் அனுமதியின்றி பனை மரங்கள் தறிப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறினார். (ம-17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அப்பையா சிவலிங்கம் (சந்திரன்)

(உரிமையாளர் அ. சிவலிங்கம் பல்பொருள் வாணிபம்
இல. 09, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.)

அன்னை மடியில் :- 12.03.1954
ஆண்டவன் திருவடியில்:- 26.04.2012
திதி: பஞ்சமி




ஓர் ஆண்டு ஆனதுவோ
உம்முகம் கண்டு
ஏற்க முடியவில்லை நினது இழப்பை
எம் கண்களின் ஈரம்
நிரந்தரமானதோ என்னவோ...
இன்னமும் காயவில்லை அப்பா!
கணப்பொழுதும் எண்ணவில்லை
எம் கலங்கரை விளக்கே!
உற்ற பல கருமங்கள்
ஓய்வின்றி செய்பவரே
ஊர் போற்ற வாழ்ந்தவரே
கனவுகள் கனிந்து வருங்காலம் - காலன்
உனைக் கவர்ந்தது ஏனோ!
வேரோடு சாய்ந்தாலும் - உன்
விழுதப்பா நாங்கள் - உம்
திருநாமம் சொல்லியே வாழ்வோம்
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்!!

(35957) (6.7)

93/9, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## வேலாயுதபிள்ளை சிறிஸ்கந்தராஜா (சிறி)

(முன்னாள் முகாமையாளர் ஈஸ்வரி சினிமா - வாழைச்சேனை, மட்டக்களப்பு)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சிறிஸ்கந்தராஜா (சிறி) 09.04.2013 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (செங்கலடி ஸ்ரீ முருகன் ஜூவலறி உரிமையாளர், மண்டைதீவு சிறுப்புலம் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா) மற்றும் இராசம்மா (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும்.

காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லத்துரை (அல்லைப்பிட்டி உடையார்), சொர்ணம்மா, சிதம்பரநாதர் சொர்ணம்மா (மண்டைதீவு) ஆகியோரின் அன்புப் பேரனும், ரூபவதியின் (ரூபி - பிரான்ஸ்) அன்புக் கணவரும், ஜசீந்திரனின் அன்புத் தந்தையும், ரூபியின் அன்பு மாமனும், அக்சையிலானின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், செல்வம் (கிரேஸ்) ஆகியோரின் மருமகனும், ஜெயசுந்தரராஜா (தெய்வம் மார்ச்சே உரிமையாளர் - பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), மஞ்சுளா (ஜேர்மனி), சோமேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகேந்திரா (பிரான்ஸ்), தெய்வேந்திரா (பிரான்ஸ்), விஜயேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரட்ணமணி (பிரான்ஸ்), குலேந்திரா (பிரான்ஸ்), மகாலிங்கம் (ஜேர்மனி), ராஜ்குமார் (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்), ஜெயக்குமார் பாக்கியராணி (கொழும்பு), ஜெயச்சந்திரன் ஆனந்தலீலா (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (கொழும்பு), செல்வராஜா (ஜேர்மனி), சுஜித்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற செல்லத்துரை தவவிநாயகம் (கிராம தலைமைக்காரர் - அல்லைப்பிட்டி - குமார் சொப் உரிமையாளரின் தந்தை) , தவவிநாயகம் கிருஸ்ணாம்பாள் (பிரான்ஸ்), நடேசபிள்ளை மங்கையர்க்கரசி (பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம், இனிச்ச புளியடி முருகன் தர்மகர்த்தா, அல்லைப்பிட்டி), இராமநாதன் செல்வலட்சுமி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர், யாழ்ப்பாணம்), சிவரெட்ணம் புவனேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி சிவலோகலட்சுமி (தபால் அதிபர், அல்லைப்பிட்டி சித்திவிநாயகர் ஸ்டோர் - பிரான்ஸ் - உரிமையாளரின் தந்தை), காலஞ்சென்றவர்களான கந்தையா பரமேஸ்வரி (சிறாப்பர் வேலணை), காலஞ்சென்ற சுயம்புலிங்கம், ஜெயஸ்ரீ (கனடா), ஞானசம்பந்தன் தையல்நாயகி (விவாகப் பதிவாளர், சுதுமலை), சச்சிதானந்தன் (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நடேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24, Avenue de Montalembert, 93600 Aulnay - Sous - Bois முகவரியுடைய அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிதொடக்கம் 12 மணிவரை நடைபெற்று பின்னர் 71, Rue des Rondeaux, 75020 Paris (M°: Gambetta) என்னும் முகவரியிலுள்ள "Crematorijum du pere Lachaise" மயானத்தில் பிற்பகல் ஒரு மணிமுதல் 2 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2.6)(35997)

மேலதிக தொடர்புகளுக்கு:
**ரூபவதி** (மனைவி பிரான்ஸ்) 0781334704
**ஜசி** (மகன் பிரான்ஸ்) 06 9922 2303
**ராஜன்** (சகோதரர் பிரான்ஸ்) 06 22 40 6757
**தெய்வம்** (சகோதரர் பிரான்ஸ்) 06 69373238
**மஞ்சுளா மகாலிங்கம்** (சகோதரி ஜேர்மனி) 00 49 311 662 44
**சியாமளா குலேந்திரன்** (சகோதரி பிரான்ஸ்) 06 20592498
**விஜயன்** (சகோதரன் பிரான்ஸ்) 06 52 30 07 55
**ராஜ்குமார்** (மைத்துனர் பிரான்ஸ்) 09 5139 8321
**நடேசபிள்ளை** (சிறிய தந்தை இலங்கை) 94 21 222 5921
**ஜெயச்சந்திரன்** (பிரான்ஸ்) 01 40 949354
**செல்வராஜன்** (ஜேர்மனி) 0049 911 4312056
**செந்தில்வேல்** (ஜேர்மனி) 00499119401877
**சுஜித்குமார்** (ஜேர்மனி) 01 5212812142
**செல்வக்குமார்** (கனடா) 00141 64389528

## காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்

தென்மராட்சி, ஏப்.15

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் அச்சு இயந்திரம் நேற்று முன்தினம் அதிகாலை ஆயுததாரிகளால் தாக்கி எரிக்கப்பட்டமைக்கு சாவகச்சேரி நகரசபையின் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் அமைதி திரும்பிவிட்டது. ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது என அரசு கருத்துக்களை வெளியிட்டாலும் இங்கு காட்டுமிராண்டிதனமான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவ்வாறான செயல்கள் ஊடக சுதந்திரத்தை நசுக்குவதுடன் ஜனநாயக செயற்பாடுகளைக் குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாக உள்ளது.

சர்வதேசம் தமிழ் மக்கள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக இலங்கை அரசின் கவனத்துக்கு சுட்டிக் காட்டிய போதிலும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. (த- 9)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 25.12.1933

மறைவு 17.03.2013



அமரர் திருநாவுக்கரசு புவனேஸ்வரி

கடந்த (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் திருநாவுக்கரசு புவனேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெறும். சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (16.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
'கோகுலம்' மகன்- தி.நகுலன் (லண்டன்).
புத்தூர் மேற்கு, புத்தூர். (35968) (6.7.11) பெறாமகள்- து.ராகினி

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



அன்னை மடியில் 19.07.1950

ஆண்டவன் அடியில் 16.03.2013

**பாலு திலகராசா**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்.)

கடந்த 16.03.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவின்போது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவாக கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் இன்று (15.04.2013) மு.ப 11.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில்நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் கட்டை,
இராச வீதி,
கோப்பாய் மத்தி.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.
0212230533, 0750407839

# 'உதயன்' மீதான தாக்குதல் மஹிந்த அரசின் கொடுமை

## சாடுகிறார் வைகோ



சென்னை, ஏப்.15

தமிழ் ஈழத்தில் உள்நாட்டுப் பத்திரிகைகளோ, தொண்டு நிறுவனங்களோ சுதந்திரமாகச் செயற்படவே முடியாது. மனித உரிமைகள் இங்கு குழிதோண்டிப் புதைக் கப்படுகின்றன என்பதை அனைத்துலக சமூகம் எண் ணிப் பார்த்து, ஈழத்தமிழ் இனப் படுகொலையை நடத்தும் மஹிந்த அரசின் இந்தக் கொடுமை இன்னும் தொட ராமல் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

'உதயன்' பத்திரிகை மீது நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து விடுத்துள்ள கண்டன அறிக் கையிலேயே வைகோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் ஏ.கே 47 உள்ளிட்ட ஆயுதம் தாங்கிய குண்டர்கள் அதிரடியாக உள்ளே நுழைந்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி, அங்குள்ள அச்சு இயந்திரங்களை உடைத்து நொருக்கித் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

யாழ். பிரதேசம் இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவர் தனிக் கூலிப்படை வைத்து அக்கிரமம் செய்வ தாக இலங்கை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தான் குற்றம் சாட்டினார். இலங்கை நாடாளுமன்றத்திலும் இது பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலை இலங்கை இராணுவத்தினரே செய்துள்ளனர். அண்மையில் தான் கிளிநொச்சியிலுள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகம் சிங்களவர்களால் தாக்கப்பட்டது. அதுவும் இரா ணுவத்தினரின் வன்முறை யாகவே தெரிகின்றது. இதனையடுத்து இலங்கை அரசிடம் பாதுகாப்புக் கோரப்பட்டும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

தமிழர்களின் பத்திரிகை அலுவலகங்களை தீயிட்டுக் கொளுத்துவதும், இயந்திரத் துப்பாக்கிகளால் சுடுவதும் சிங்கள இராணுவத்தினுடைய கொடுஞ் செயலே.

'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரான சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர். அவரின் பத்திரிகை அலுவ லகத்துக்கே இந்த நிலைமை என்றால், தமிழீழத்தில் வாழும் தமிழர்கள் உயிருக்கும் உடைமைக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லை என் பதும், சிங்கள இராணுவத் தின் அராஜகம் தமிழீழத்தில் தொடர்ந்து தலைவிரித்து ஆடுகிறது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் தாயகத் திலிருந்து இலங்கை இராணுவமும், பொலிஸும் முற்றாக வெளியேற்றப்பட்டாக வேண்டும். ஐ.நா. சபையும், சர்வதேச நாடுகளும் இந்த நிலைமையை ஏற்படுத்த முன்வரவேண்டும்-என்றார்.

### விடுதலைச் சிறுத்தைகளும் கண்டனம்

அரசின் ஆதரவோடும் இராணுவத்தின் தூண்டுதலோடும் 'உதயன்' மீது நடத்தப்பட்ட தாக்குதலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. இலங்கையில் ஊடக சுதந்திரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐ.நா. சபை இதில் தலையிட வேண்டும் எனவும் அது கோரியுள்ளது. இனியும் காலம் தாழ்த்தாமல் ஐ.நா. சபை தலையிட்டு இலங்கையின் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று அது கூறியுள்ளது. (த-5)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், கனடா குடியுரிமை பெற்ற, செவ்வாய் தோஷ 30 பாவம் உடைய 30 வயதுடைய மணமகனுக்கு கனடாவில் தொழில் புரியக்கூடிய ஆங்கில அறிவுடைய மணமகள் தேவை. தொடர்பு:- 0775954412 (35975)(6.2)

**வீடு விற்பனைக்கு**

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் வீதியில் 12 பரப்பு காணியில் சகல வசதியுடன் கூடிய வீடு வளவும், நெற்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- த.மாதவன் 075 0719707 (35782) (6.7)

**விற்பனைக்கு**

கட்டுடை, மானிப்பாயில் 9 பரப்பு காணியுடன் கோழிப்பண்ணை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0770366488 (35987)(6.2)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கடந்த 2012 டிசெம்பர் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சுழிபுரம் கிழக்கு கந்தகோட்ட கல்வி நிலைய மாணவன் இ.சிவராமன் 9 A பெற்று சாதனை

Best Wishes

சித்தியடைந்த ஏனைய மாணவர் விபரம்:
ந.நிலக்ஷிகா, இ.தர்ஷினி, நி.பெந்துஜன், ஜெ.நேசந்தரன், நே.துவாரகன், பி.பிரசங்கர், ர.துஸ்யந்தி, பி.ஜீவந்தன், ஒ.ஜகீலன்
நல்ல பெறுபேறுகளைப் பெற்று கந்த கோட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
**பணிப்பாளர், ஆசிரியர்கள்.**
நீங்களும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறவேண்டுமானால் நாடுங்கள் கந்த கோட்ட கல்விநிலையத்தை
இரண்டாம் தவணைக்குரிய தரம் 1 இலிருந்து O/L வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
தொடர்பு: 021 225 0633 (35993)(6)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

தாயின் மடியில் 02 03 1997



இறைவன் அடியில் 15 01 2011

செல்வன் சிறீகாந்தன் நிமலன்

தம்பி நிமலா!
நீ எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனதடா!
ஆனாலும் எம் இதயத்து வேதனை
இன்னும் தீரவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
என்றும் உன் நினைவுடன்

கரந்தன்,
நீர்வேலி மேற்கு. (35984)(6.7) குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**திருமதி சுந்தரலிங்கம் கனகேஸ்வரி**



ஆலோலை வீதி, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் கனகேஸ்வரி 12.04. 2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி க.சிவபாக்கியம், சிவயோகம், சண்முகம் மற்றும் மாரிமுத்து (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சபாபதிப் பிள்ளை மற்றும் பொன்னம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கேதீஸ்வரி (ஆசிரியை, யா/ நவோதயா வட்டு இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற லிங்கேஸ்வரி மற்றும் வெற்றிவேல் (பாதுகாப்பு உத்தியோகத்தர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை), சக்திவேல் (மாவட்ட செயலகம்), குமரேஸ்வரி (ஆசிரியை-பொன்னாலை வரதராஜப் பெருமாள் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவாநிதி (இ.மி.ச), விஜயசேகர் (உரும்பிராய்), ஹேமராணி ஆகியோரின் அன்பு மாமியும், வெ.திலக்ஷன், வெ.சாயுக்ஷா, வி.சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலோலை வீதி,
வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. (35988) (6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் சிவராசா

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவராசா (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத் துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற மணியம் மற்றும் பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இந்திராதேவியின் அன்புக் கணவரும், சியாம் (பிரான்ஸ்), சியாஸ் (யாழ்ப்பாணம்), சுமிராஜ் (பிரான்ஸ்), மகினனன், வினோஜன், இந்து ஜெனனி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனிஸ்ரெலா, ஜெஸ்மிலா, வஜனா (பிரான்ஸ்), நதீபா, திலக்குமார் ஆகியோரின் மாமனும் கிதுஷான், நிலக்ஷன், அஸ்வின், விதுஷனா, கதுஸ்ரியன், சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

80/10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0212229200

(36007)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் கந்தையா (ஓவசியர்)



(ஓய்வு பெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிமாகவும் கொண்ட அருணாசலம் கந்தையா நேற்றுமுன்தினம் (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிவசக்தி (பிரான்ஸ்), சிவராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணம் (பிரான்ஸ்), திருச்செல்வம் (தாய்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீண், பிரதீப், சிந்துஜா, குகப்பிரியா சஞ்ஜீவன், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சின்னத்தம்பி, சின்னம்மா மற்றும் இராமலிங்கம் ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் கொட்டையடித்தூது இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
0783013814

(27830)(8)

தகவல்:
குடும்பத்தினர்.

# மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவுகள்

மாவட்டப் பதிவுகளை பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மாவட்ட மேலதிக காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இதுவரை காலமும் இருந்து வந்த வடமராட்சி கிழக்குப் பிர தேசத்துக்கான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் மருதங் கேணிப் பிரதேச செயலகத் துக்கு மாற்றப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்குப் பிர தேசத்தில் உள்ள குடத்தனை, செம்பியன்பற்று பதிவாளர் பிரிவுகளைச் சேர்ந்தோர் நாளை செவ்வாய்க் கிழமை முதல் குறித்த பதிவுகளின் பிரதிகளை மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட மேல திக காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த குடத்தனை, செம்பியன்பற்று பதிவாளர் பிரிவைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் கொண்ட புத்தகங்களை யாழ். மாவட்ட மேலதிகப் பதிவா ளர் ப.பிரபாகர், பருத்தித்துறை மாவட்ட மேலதிகப் பதிவாளர் என். பிரபாகரன் ஆகி யோர் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செய லர் என்.திருலிங்க நாதனிடம் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

அந்தப் பதிவுப் புத்தகங்கள் மருதங்கேணி பிரதேச செயலக பதிவு அலுவலகப் பிரிவில் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

பதிவுகளைப் பிரதேச செயலகங்களுக்கும் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மாவட்ட மேலதிக காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கடந்த வருடங்களுக்கு முன்னர் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் யாவும் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டு அந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பதிவுகள் தொடர்பான தேவைகளை அங்கேயே பூர்த்தி செய்து வருகின்றனர்.

பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்குப் பிர தேச மக்கள் சிரம மின்றி தமது பதிவுகளைப் பெற்றுக் கொள்ள தற்போது வாய்ப்புக் கிடைத் துள்ளது என்று கூறப்பட்டது. (ம-8)

## சமய சந்நிதிகளில்

கரவெட்டி வெல்லன் விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் 25 ஆம் திகதி சித்திரப் பூரணை தினமான வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன. (வ-8)


★ ★ ★

துன்னாலை, கலிகைச் சந்தி கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாளான சித்திரா பூரணை தினமான வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (வ-8)

★ ★ ★

வவுனியா வடக்கு, குளவிசுட்டான் பனையில் வைரவர் ஆலய புனராவர்த்தன கும்பாபி ஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நாளை செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு குடமுழுக்கு விழாவும், புதன் கிழமை காலை 8 மணிக்கு அபிஷேகமும், வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து பகல் பூசை நடைபெற்று அன்றைய தினம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-435)

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் இராசு

மயிலணி வடக்கு, சுன்னாகத் தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராசு (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணுலகில் 23.07.1928 — விண்ணுலகில் 16.03.2013

அமரர்
### கந்தரடியார் தருமரெத்தினம்

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்டவரும்கடந்த 16.03.2013 இறைபதமடைந்தவருமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னார் இறைபதமடைந்த செய்தியை உடன் தொலைபேசி மூலம் அறியத்தந்தவர்களுக்கும், பிரிவுத் துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் உணவு தந்தவர்களுக்கும், கடித மூலம் அனுதாபத்தை தெரிவித்த (கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம் கொக்குவில்) அவர்களுக்கும் 31ஆம் நாள் நினைவஞ்சலியை அச்சிட்டு அனுப்பிவைத்த உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குளப்பிட்டி சந்தி,
நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.

மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.
தொடர்புகளுக்கு:T.P: 00491772109494,
0097470640859, 0214913193

## மரண அறிவித்தல்

### திருமதி கற்பகம் இராஜேந்திரம்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் இராஜேந்திரம் கடந்த (13.04.2013) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.C.இராஜேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் மாப்பாணர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், இராஜினிசகாயசீலன் (உப அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இராஜாந்தினி சேது காவலர் (ஆசிரியர் - சென்தோ மஸ் கனிஸ்ட பாடசாலை- கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சகாயசீலன் மற்றும் ஹர்சன்சேதுகாவலர் (ஹட்டன் நஷனல் வங்கி- கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், சண்முகத்தின் (டென்மார்க்) அன்புச் சகோதரியும், காயத்திரியின் (டென்மார்க்) அன்பு மைத்துனியும், ஸ்ரீபன் கரேந்திரா, செரூபி, செரீனா, மதூரி, மேசாக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (15.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் பரி கன்னிமரியாள் ஆலய சென்மேரிஸ் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பெத்தனி'
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(36005)(2.6.)

தகவல்:
பிள்ளைகள்.

After O/L பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றியோ தோல்வியோ

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்களுடைய தனியார் வைத்தியத்துறையில் ஆய்வுகூடம் முதல் மற்றைய அனைத்து வைத்திய பணிகளிலும் வைத்திய அதிகாரிகளிற்கு உதவியாளராகச் செயற்படும் பதவிகளுக்கான பயிற்சியினை இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அரச வைத்தியர்கள் மூலமாக நடத்தி அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழையும் வழங்கி பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பையும் வழங்குகிறது கே.யு எடியுகேசன் நிறுவனம்.

உங்கள் O/L மற்றும் A/L கல்வித்தரம்
வாழ்வின் முன்னேற்றத்திற்கு
தடை அல்ல....
KU EDUCATION
Creating Employable Graduates

CMA- மருத்துவ உதவியாளர் பயிற்சி
பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு உறுதி
KU Education 6 months தற்போது மட்டும்..
~~25,000/=~~ 12,500/=

(சி/8241)

விபரங்களுக்கு - 0773164617/021-3208342
http://edu.kugroup.info
இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

# மதுபோதை, துன்புறுத்தல் கடந்த வாரம் 44 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.15

பிறருக்கு அடித்துக் காயப் படுத்தியமை மற்றும் மது போதையில் வாகனம் செலுத் திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் மட்டும் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் தெரிவித்த னர்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் கள் இதனைத் தெரிவித்தனர்.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரி விலேயே பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 32 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அங்கு மது போதையில் வாகனம் செலுத்திய குற் றச்சாட்டில் 7பேரும் காங் கேசன்துறைப் பிரிவில் 5 பேரு மாக 12 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ந-4)

## ஹெரோயினுடன் மாட்டினர் இருவர்

கொழும்பு,ஏப்.15

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து 253 கிராம் ஹெரோயின் மீட்கப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மோதர, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இந்தச் சம்ப வம் தொடர்பில் பொலிஸ் போதை பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பிரபாகரனின் சாவுக்கு ஜெயலலிதாவே காரணம்

## முன்னாள் மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.15

தமிழீழ விடுதலைப்புலி கள் இயக்கத்தைப் பிற நாடுகள் தடை செய்தமைக் கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போரின் போது இறந்தமைக்கும் மூல காரணம், ஜெயலிதாதான். இதனை ஈழத்தமிழர்கள் நன்கு அறிவார்கள் என்று இந்தியா முன்னாள் மத்திய அமைச்சர் ஆர்.ராசா தெரிவித் தார்.

நீலகிரி மாவட்டத்தில் இடம்பெற்ற கட்டடத்திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தைத் தடைசெய்யச் சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் ஜெயலலிதா தான் என்பதை தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள்.

ஜெயலலிதா சட்ட சபையில் தீர்மானம்கொண்டு வந்து விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய வேண்டும். பிரபாகரனை இங்கு கொண்டு வந்து சிறைப் பிடிக்க வேண் டும், தண்டனை வழங்க வேண்டும் என்று கூறிய தால் மத்திய அரசு தடை யைக் கொண்டுவந்தது.

எனவே விடுதலைப்புலி கள் இயக்கத்தை தடை செய்வதற்கும் போரில் பிரபாகரன் இறந்தமைக்கும் மூலகாரணம் ஜெயலலிதா தான். இதனை இங்கு உள்ள இலங்கைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். அந்த ஜெய லலிதா இன்று நான் ஈழத்தை வாங்கித் தருவேன். தமிழர் களின் உரிமைகளைப் பெற் றுத் தருவேன் என்று கூறுகி றார். உலகத்தில் உள்ள பிற நாடுகள் விடுதலைப்புலிகள் தடைசெய்தமைக்கும் இறந் தமைக்கும் முக்கிய காரணம் ஜெயலலிதா தான் என்பதை நாம் மறுக்க முடியாது என் றார். (த-14)

## பாடசாலை மண்டபம் திறப்பு

குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித் தியாலயத்தின் பிர தான மண்டபத் திறப்பு விழா இன்று திங்கட் கிழமை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதி பர் த.குணரத்தினம் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமாகாண ஆளுந ரின் செயலாளர் இ.இளங்கோவ னும், சிறப்பு விருந்தினர் களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரராசா வும் பிர தேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ரதிநகுலேஸ் வரனும் கலந்து கொள் வர். (வ-400)

## புத்தாண்டில் சூடு

கொழும்பு,ஏப்.15

புத்தாண்டு கொண்டாட் டத்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து மேற்கொள்ளப்பட்ட் துப்பாக் கிப் பிரயோகத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் திஸ்ஸ மாராகம கங்ஹசிறிபுரவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டுக் கொண் டாட்டத்தின் போது பற் றவைக்கப்பட்ட வாண வேடிக்கை பக்கத்துவீட்டு கூரையின் மீது விழுந்த மையை அடுத்தே இரு வீட்டா ருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ச)

## நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.15


முந்நூறு வருட பழைமை வாய்ந்த நவாலி களை யோடை கண்ணகை அம் மன் ஆலயம் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கான பாலஸ்தாபனம் கடந்த 11 ஆம் திகதி சிவஸ்ரீ சு.சுந்தரராஜகுருக்கள் தலை மையில் இடம்பெற்றது.

அதை அடுத்து நவாலி இளைஞர்களை திரட்டி ஆலய புனருத்தாபன திருப் பணிச் சபை ஒன்று உருவாக் கப்பட்டு அதன் தலைவராக நா.குமணன் நியமிக்கப்பட் டுள்ளார்.

களையோடை அம்மனின் கட்டடப் புனரமைப்புப் பணி களை பார்வையிட்டு எந்த வகையான உதவிகளையும் வழங்கி உதவலாம் என ஆலய பிரதம குரு சிவத்திரு கந்தையா நாகேந்திரம் தெரிவித்தார். (ஒ-50)

# அமைதியான முறையில் கழிந்தது புத்தாண்டு





யாழ்ப்பாணம், ஏப்.15

குடாநாட்டில் புத்தாண் டுக் கொண்டாட்டங்கள் இந்த முறை மிகவும் அமை தியாக சமய வழிபாடுகளு டன் இடம்பெற்றன.

நள்ளிரவு புத்தாண்டு பிறந்த வேளையில் மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட னர்.

ஆலயங்களில் இடம் பெற்ற சிறப்பு வழிபாடுகளில் மக்கள் பக்திபூர்வமாகக் கலந்து கொண்டதுடன் பொங்கல் நிகழ்வுகளிலும் ஈடுபட்ட னர்.

சுபநேரத்தில் வர்த்தகர் கள் கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வங்கிகள், தொழில் நிலை யங்களில் புதிய கொடுக்கல் வாங்கல்களும் ஆரம்பிக்கப் பட்டன. கடந்த வருடங்க ளைப் போல் இம்முறை புத்தாண்டு களை கட்ட வில்லை. (ம-7-17-86- 135)

## கலைஞருக்கு பாராட்டு

சந்நிதி முருகன் மீதும், பண். பிரான்று முருகன் மீதும் 140 இற்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றிப் பாடிய கலாபூசணம் க.தெய்வேந் திரம் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள அமைப்பு களால் பாராட்டப்பட்டுள்ளார்.

அண்மையில் பிரான்பற்று ஞானவைரவப் பெருமானின் வருடாந்த அலங்கார உற் சவத்தின் போது திருவூஞ்சற் பாடல் களை இயற்றி கலை மணி க.தெய்வேந்திரம் பாடி யமை பலராலும் பாராட்டப் பட்டது.

இவர் போக்குவரத்து சபை யின் முன்னாள் சிரேஷ்ட நேரக் கணிப்பாளர் ஆவார். (வ-50)

## மாதாந்தக் கூட்டம்

வடமராட்சி,ஏப்.15

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை யின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு சபைத் தலைவர் பொ.வியா கேசு தலை மையில் நடை பெறவுள்ளது. (ந-8)

## வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு,ஏப்.15

நுகர்வோர் சட்டங்களை மீறி பொருள்களை விற்பனை செய்த 300 இற்கும் அதிக மான வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

புறக்கோட்டையிலேயே அதிகளவான வர்த்தக நிலை யங்கள் சுற்றிவளைக்கப்பட் டன என்று அதிகார சபை யின் சிரேஷ்ட அதிகாரி ஒரு வர் குறிப்பிட்டார்.

சில வர்த்தக நிலையங் களில் ஆடைகளின் விலை 5000 ரூபா எனக் குறிப்பிட்டு அதனை 1900 ரூபாவுக்கு விற் பனை செய்த சிலரும் இத னுள் உள்ளடங்குகின்றனர் என்று அவர் கூறினார். (ச)

## முஸ்லிம்களுக்கு எதிராக அடுத்த கறுப்பு ஜூலை

கொழும்பு,ஏப்.15

இந்தமுறை கறுப்பு ஜூலை முஸ்லிம்களுக்கு எதி ரானதாக அமையும் என்று களனி பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கல்கந்த தம்மாநந்ததேரர் தெரிவித்தார்.

வருடந்தோறும் கறுப்பு ஜூலையை இலங்கை சந்தித்து வருகிறது. இந்நிலையில் இந்த வருடம் அது முஸ்லிம்களுக்கு எதிரான கறுப்பு ஜூலையாக இருக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் இனங் களுக்கு இடையில் நல்லுறவை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தோல்வியைக்கண்டுள்ளன. இதனால் இலங்கையில் இன்று சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது எதிர்காலத்தில் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் என்று அவர் எச்சரித் துள்ளார். (ச)

## புதிய மின்சாரக் கட்டணங்கள் 17 இல் அறிவிக்க நடவடிக்கை

### மக்கள் பயன்பாடு ஆணைக்குழு தகவல்

கொழும்பு,ஏப்.15

மீளாய்வு செய்யப்பட்ட புதிய மின்சாரக் கட்டணங் களை எதிர்வரும் 17 ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக மக்கள் பயன்பாடு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அதற்கான சகல நடவ டிக்கைகளும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலை வர் ஜயதிஸ்ஸ டி சொய்சா குறிப்பிட்டார். புதிய மின் கட்டணங்கள் தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை அடுத்தவாரம் மின் சார சபையிடம் சமர்ப்பிக்கப் படும் என்று அவர் கூறினார்.

மின்சாரக் கட்டண மீளாய்வு குறித்து மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட யோசனைகளின் பிரகாரம் பரிந்துரை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சாரக் கட்டண மீளாய்வு குறித்து மக்களால் 200 இற்கும் அதிகமான எழுத்துமூல யோசனைகளும், 79 வாய்மூலம் யோசனை களும் முன்வைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மேன்முறையீடு செய்யலாம்

வடமராட்சி,ஏப்.15

வடமராட்சி கல்வி வல யத்தில் இருந்து இரண்டாம் கட்டமாக வன்னிப் பிரதேசத் துக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ள ஆசிரியர்கள் மேன் முறையீடு செய்யவிரும்பின் மேன்முறையீடு செய்ய லாம்.

எதிர்வரும் முதலாம் திக திக்கு முன்னதாக அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப் பிக்குமாறு வடமராட்சி வல யக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள் ளார்.

வன்னிக்கு இரண்டாம் கட்டமாக இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விவரப்பட்டி யல் தற்போது வடமராட்சி கல்வி வலயத்தால் வெளி யிடப்பட்டுள்ளது. (ந-8)

## வடமராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி முத்திரைகளுக்கு கொடுப்பனவு வழங்கல்

வடமராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி முத்திரைகளுக்கு, சமுர்த்தி வங்கிகளால் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நெல்லியடி கொடிகாமம் வீதி, நெல்லியடி விக்கினேஸ்வரா வீதி, உடுப்பிட்டி ஆகிய இடங்க ளில் உள்ள சமுர்த்தி வங்கி களில் சமுர்த்தி முத்திரை களுக்கான பணம் வழங் கப்பட்டு வருகிறது.

புத்தாண்டை ஒட்டி பிர தேச சமுர்த்தி வங்கிச் சேவை கள் நாளை திங்கட்கிழமை இரவு 8 மணி வரை செயற் படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பருத்தித் துறை, பொலிகண்டி ஆகிய இடங்களில்செயற்படும்சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தி முத்திரைக்கான கொடுப்பனவு கள் வழங்கப்படுகின்றன. (ந-8)

# தேசிய பரீட்சைகள் தொடர்பில் மாற்றம் செய்யப்பட வேண்டுமா?

## ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆலோசனைக் குழுவுக்கு கல்வியமைச்சர் பணிப்பு




கொழும்பு,ஏப்.15

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சைகள் தொடர்பாக ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமா? என்பது பற்றி ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும் பொதுப் பரீட்சைகள் தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனை வழங்கவென கல்வி அமைச்சர் 11 பேர் கொண்ட விசேட ஆலோசனைக் குழுவொன்றை நியமித்துள்ளார். இந்தக் குழுவின் முதல் கடமையாக ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இரண்டு பரீட்சைகள் தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரைகளை முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

சுயாதீனமாக இயங்கக் கூடிய இந்தக் குழு, பரீட்சை முறைமை, பரீட்சை முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தல், வினாத்தாள்கள் தயாரித்தல், விடைத்தாள் திருத்துதல், பரீட்சை குளறுபடிகள், தடைகள் ஏற்படுத்துதல் தொடர்பாக ஆராய்தல், அதற்கான தீர்வுகளை வழங்குதல் போன்ற விடயங்களை முன்னெடுக்கவுள்ளது.

இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற பொதுப் பரீட்சைகள் அனைத்தும் ஒழுங்கான முறையில், ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ச)



வறட்சி காரணமாக நெடுந்தீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலையில் மக்களுக்கு உதவும் வகையில் கடற்படையினர் பொதுமக்களுக்கு குடிதண்ணீரைத் தினமும் வழங்கி வருகின்றனர். மக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்காக பரல்களுடன் காத்திருக்கின்றனர். (ம-7)

## வீதி விளக்குப் பொருத்தும் பணி தொடர்கிறது

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தொடர்ந்து வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்தார்.

வீதி விளக்குகள் பொருத்தப்படாத பகுதிகள் இனங்காணப்பட்டு பொருத்தப்பட்டு வருகின்றன. தற்போது திருநெல்வேலி சந்தி வளாகம், ஆடியபாதம் வீதி என்பவற்றுக்கு இவை பொருத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ந்தும் இந்தப்பணி தொடர மக்களது ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# முள்ளிவாய்க்கால் முடிவல்ல; திருப்பம்

## மாணவர்கள் போராட்டம் இதையே உணர்த்துகிறது



சென்னை, ஏப்.15

முள்ளிவாய்க்கால் என்பது முடிவல்ல. அது ஒரு திருப்பம். மாணவர்களின் உணர்ச்சி மிகு போராட்டம், போர் இன்னும் முடிந்து விடவில்லை என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் கவிஞர் காசி ஆனந்தன்.

திருப்பூரில் நடைபெற்ற 'தமிழீழமும் மாணவர் கடமையும்' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே காசி ஆனந்தன் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

''மாணவர்கள் மிகக் கூர்மையுடன் இந்தப் பிரச்சினையைக் கவனித்து வருகின்றனர். மிகத் தெளிவாகப் போராடி வருகின்றனர். முள்ளிவாய்க்கால் என்பது முடிவல்ல, அது ஒரு திருப்பம். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று வீசும் நெருப்பின் வீச்சு, போர் இன்னும் முடிந்து விடவில்லை என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

### 'இனப்படுகொலை' என்றார் இந்திராகாந்தி

இந்திய விடுதலைப் போரைவிட, தமிழீழ விடுதலைப் போரின் பாதிப்பு மிக அதிகம். இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழக்கவில்லை. ஆனால் சின்னஞ்சிறு தமிழீழத்தில் மூன்று லட்சம் பேர் கொல்லப்பட்டனர். இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, 'இலங்கையில் நடப்பது இனப்படுகொலை' என்றார். இப்போது நிலைமை மோசமடைந்திருக்கும் நிலையில், இனப்படுகொலை எனக் கூறாமல், 'போர்க் குற்றம் நடந்திருக்கிறது' என்று மட்டுமே சொல்வது எவ்வளவு பெரிய அநீதி?

தமிழீழத்தில் கடும் வறுமை நிலவியபோது, இந்தியா போர் விமானம் மூலம் உணவுப் பொதிகளை வீசியது. கொஞ்ச காலத்தில் அதேபோர் விமானங்கள் எங்கள் தலையில் குண்டுகளை வீசின. அதேபோல முதலில் பிஸ்கட் கொடுத்து, பின் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான் பாலச்சந்திரன். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சில நேரங்களில் எங்களுக்கு வித்தியாசம் தெரியவில்லை'' - என்று தெரிவித்தார் அவர். (ற)

## விபத்தில் காயம்

வீதியில் சென்ற மாணவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளிவிட்டு ஓடித் தப்பியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த மனோகரன் ராஜாராம் (வயது-12) என்னும் மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்திய வீட்டுத் திட்ட முஸ்லிம் விண்ணப்பதாரிகளுக்கான விசேட விளக்க கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது

இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்கள் இந்தக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது (ஒ-ரி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
15.07.1932

மறைவு
15.03.2013

**அமரர் நாகம்மா சுப்பிரமணியம்**

எமது குடும்பத்தலைவியின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (15.04.2013) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**36/10, மணல்தறை ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (36012) (10,6) **குடும்பத்தினர்.**


## இரத்ததான முகாம்

புதுவருடத்தினை முன்னிட்டு பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தினரால் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

பொற்பதி அறிவாலயத்தில் நேற்று இடம்பெற்ற இம் முகாமில் சுமார் 54 குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்தனர்.

இரத்ததானம் செய்தோர் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தினரால் சன்மானம் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக கழகத்தின் செயலாளர் பிரேம்குமார் தெரிவித்தார். (ரி)

### திருத்தி வாசிக்கவும்

நேற்று (14.04.2013) பக்கம் 6B இல் பிரசுரமான **ஆறுமுகம் தானையா** என்பவரின் மரண அறிவித்தலில் அவரது பெயர் ஆறுமுகம் தாளையா எனப் பிரசுரமாகிவிட்டது.


## போதகர் ஐக்கிய ஒன்றுகூடல்

பிராந்திய போதகர்கள், மனைவிமார்கள்
ஐக்கிய ஒன்று கூடல்

**இடம் : மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை**
**காலம் : 16.04.2013 காலை 09.00-பி.ப 02.00 மணிவரை**

தெற்கிலிருந்து வருகைதரும் போதகர்கள், மனைவிமார்கள் இந்த ஒன்று கூடலில் கலந்துகொள்வார்கள்.

பேச்சாளர் : **Pastor David Fernando**
**Pastor Lal**

மேலதிக விவரங்களுக்கு: **Pastor Sam Rajasuriar**
**T.P: 0777238300.**

(சி/8361) (10,6)



## மரண அறிவித்தல்

## சரவணமுத்து புனிதவதி



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து புனிதவதி 13.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் (பிரதம லிகிதர்-வங்களாவடி V.C) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா (Milk Bar), சிவபாக்கியம், சிவலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**பொன்னையா லேன்,**
**ஆனைக்கோட்டை.** (36013)(10.6)

**தகவல்:**
**இ. சூரியகுமார்.**

# காந்திய சிந்தனை இன்றளவும் மக்களை நல்வழிப்படுத்துகிறது

## காந்தியவாதி தம்பிப்பிள்ளை கருத்து

இலங்கையில் 1949 ஆம் ஆண்டில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை உருவாக்கி உருத்திரபுரத்தில் அதனைச் செயற்படுத்தி வெற்றி கண்டவர் பெரியார் அமரர் சி.க.வேலாயுதபிள்ளை. அவரின் பணி இன்றுவரை திளைத்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற முன்னாள் மும்மொழி பெயர்ப்பாளரும், காந்தி சேவா சங்க ஸ்தாபகர்களில் ஒருவருமான சோ.க.தம்பிப்பிள்ளை.

அவர் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிறுவர் இல்லம் இன்று வரை நூற்றுக்கணக்கான சிறார்களின் எதிர்காலத்தை வளம் பெறச் செய்து வருகிறது. பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர்களுக்கென தனியான விவசாயப் பண்ணையை தருமபுரத்தில் அமைத்துக் கொடுத்தார். இவை யாவும் கடந்த காலங்களில் ஏற்பட்ட போரால் பாதிக்கப்பட்டன.

தற்போது அவை மீளமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பெரியார் வேலாயுதபிள்ளையின் கனவை நனவாக்க முடியும்-என்றார். (ஐ-9)

# மரண அறிவித்தல்கள்



## சுப்பையா பொன்னுத்துரை

*(பிரபல கார் தரகர், மாப்பிளை)*

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னுத்துரை (மாப்பிளை) நேற்று (14.04.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியம் (கோண்டாவில்), மற்றும் பரமேஸ்வரி (கனடா), சரஸ்வதி (கோண்டாவில்), காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஞானி, இந்தியன் Bank) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஈஸ்வரன் (ஆட்டோ உரிமையாளர்), லிங்கேஸ்வரி (ஜெகதா), ஜெகதீஸ்வரன் (பபி, இத்தாலி), சத்தீஸ்வரன் (சத்தி, இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வமலர் (சசி, இத்தாலி), கவிதா (இத்தாலி), ஜெயந்தி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும், விக்னேஸ்வரன்- சிந்துயானி (சுவிஸ்), சிவரூபன்- கார்த்திகாயினி (பிரான்ஸ்), பிருந்தாபன் (சுவிஸ்), கஜீந்தன் (சுயதீன தொலைக்காட்சி I.T.N, வசந்தம் F.M கொழும்பு), தாட்சாயினி (கொழும்பு), பவித்திரா (கொழும்பு), சஞ்சீவன் (கொழும்பு), வைஷ்ணியா (இத்தாலி), சௌமியா, ரிஷிக்கா, சுபேக்கா, சாருக்கா (இத்தாலி) ஆகியோரின் பேரனும், லக்ஷிகன், லோஜினிக்கா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனும், வேதநாயகத்தின் (இத்தாலி) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2013) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இருபாலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
ஈஸ்வரன் (மகன்)

கோப்பாய் தெற்கு,
இருபாலை.

(சி/8383)(9.14)

## திருமதி மீனாட்சியம்மா கணேசகுருக்கள்



திருமதி மீனாட்சியம்மா கணேசகுருக்கள் நேற்று முன்தினம் (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கோவிற்கடவை ஆலய பிரதம குருக்கள் பிரமஸ்ரீ ஆ.கணேசகுருக்கள் அவர்களின் அன்பு மனைவியும் சுகந்தினி, மைதிலி ஆகியோரின் அன்புத் தாயும் பிரமஸ்ரீ பூரண சுதாகரக் குருக்கள் (கோப்பாய்), பிரமஸ்ரீ நா.கலாதரக் குருக்கள் (நாவற்குழி) ஆகியோரின் பாசமிகு மாமியும் முத்துஐயர் பார்வதியம்மா தம்பதியரின் (கொழும்பு) கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அருணாசல ஐயர் மற்றும் இராதாகிருஷ்ணஐயர் (தென்னாபிரிக்கா), இராஜேஸ்வரியம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சபரீஸ்வர சர்மாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோவிற்கடவையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (16.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 7 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/8362) (23-14)

**லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள் - 2013**

1ஆம் பரிசு - 551
2ஆம் பரிசு - 18300
3ஆம் பரிசு - 122

★ஆறுதல் பரிசில்கள் 113, 21433, 1968, 19655, 492, 20332, 3169, 971, 9832, 115

அதிஷ்டசாலிகள் தங்கள் பரிசில்களுக்கான அதிஷ்டலாபச் சீட்டுக்களை எதிர்வரும் (25.04.2013) க்கு முன் அலுவலகத்தில் காண்பித்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்**
உப தபாற்கந்தோர் வீதி, ஆனைக்கோட்டை. (36019) (23-14)

**ஊரெழு கிழக்கு பழனி முருகன் ஆலய அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள் - 14/04/2013**

1ஆம் பரிசு - 15508
2ஆம் பரிசு - 10402
3ஆம் பரிசு - 16576

★ஆறுதல் பரிசில்கள் 14152, 1910, 727, 1644, 16708, 4687, 16587, 17384, 9213, 3812.

அதிஸ்டசாலிகள் தங்கள் பரிசில்களுக்கான அதிஸ்டலாபச் சீட்டுக்களை எதிர்வரும் (25.04.2013) க்கு முன் ஆலய நிர்வாக சபையுடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தி பரிசைப் பெற்றுக் கொள்ளவும்.

**பழனிமுருகன் ஆலய பரிபாலன சபை**
ஊரெழு கிழக்கு சுன்னாகம் (ஆனந்த கானம்) (36021)(23)

**தவறிவிட்டது**

கனகசபை பாலராசா ஆகிய எனது ஆள் அடையாள அட்டை (613583670V) மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மற்றும் வங்கி அடைவுப் பற்றுச்சீட்டு அடங்கிய சிறிய பை தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P மூலம் தகவல்தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
*சன்மானம் தரப்படும். 0779760424*


**Thars Fashion Online Shoping சித்திரை 2013 -வெற்றியாளர்**

செல்வி. சிவகுமார் பிரகஸ்வினி - மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு.
1000/= உடன் 12000/= பெறுமதியான ஆடைகளை வென்றுள்ளார்.
இவருக்கு Thars Fashion இன் வாழ்த்துக்கள். WWW.tharsfashion.com
(36016)(9.14)

# மரண அறிவித்தல்

## றெனிசன் றொபேட் லொயின் பேட்

(மாணவன், யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றெனிசன் றொபேட் லொயின் பேட் நேற்று (14.04.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் றெனிசன் றொபேட்-சந்திரா தம்பதியரின் பாசமிகு மகனும், றியோனா (பிரான்ஸ்), சலோஜினி(லண்டன்), தனுசியா, தர்ஷனா, லொயின்றியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், புள்ரனின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.04.2013) திங்கட்கிழமை பி.ப. 4.00மணியளவில் இல. 17/02, 3ஆம் குறுக்கு தெரு, பாஷையூரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17/02, 3ஆம்குறுக்கு தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கம்பீர், கலிஸ் கலக்கல் கொல்கத்தா வாகை

கம்பீர் துடுப்பாட்டத்தில் கலக்க, கலிஸ் சகல துறைகளிலும் பிரகாசிக்க 48 ஓட்டங்களால் ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணியை வீழ்த்தியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.





ஐ.பி.எல் தொடரில் 17 ஆவது போட்டி நேற்று கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் தமது பணியைச் சரிவரச் செய்ததால் மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையை கொல்கத்தா அணி பெற்றுக் கொள்ள முடிந்தது. பிஸ்லா 28 ஓட்டங்களையும், கம்பீர் 53 ஓட்டங்களையும், கலிஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதிநேரத்தில் அதிரடி வித்தை காட்டிய இயன் மோர்கன் 21 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் கொல்கத்தா அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

**இறுதிநேரத்தில் அதிரடி வித்தை காட்டிய இயன்மோர்கன் 21 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் கொல்கத்தா அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.**

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சங்கா தலைமையிலான சன்ரைஸர்ஸ் அணி கொல்கத்தா அணியின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறியது. அந்த அணியின் பட்டேல் 27 ஓட்டங்களையும், வைற் 34 ஓட்டங்களையும், திஸ்ஸர பெரேரா 36 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். இதனால் சன் ரைஸர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்ற நிறைவில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களை மட்டுமே பெற்று 48 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் கொல்கத்தா அணியின் கலிஸ் 3 இலக்குகளையும், பாட்டியா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் தெரிவுசெய்யப்பட்டார். (ந)


**BITSMANS**

கல்வி நிறுவனம் மானிப்பாய்

**O/L DAY CLASS**

SUPER GRADE ஆசிரியர் குழு

ஆரம்பம்:- 17/04/2013 புதன் 8.00 **AM**



**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள்
சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு தேவை.
தொடர்பு- 0777860456



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Diploma in English** *(2 Months)*

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**Spoken English With Grammar-Quick Learning Course** *(1½ Months)*

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிறபகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Advanced Diploma in English** *(4 Months)*

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

**IELTS** Academic / General Duration : (2½ Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன்
இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால்
முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்

**Duration : 2 Months**

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge ஆல் சான்றிதழ்.

- British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 15.04.2013 Batch II - 20.0 .2013 Batch III - 24.04.2013 Batch IV - 27.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074


## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி பேரின்பநாயகம்



கரப்பிட்டியந்தனை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 131/2B, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பேரின்பநாயகம் நேற்றுமுன்தினம் (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை பேரின்பநாயகத்தின் (முன்னாள் வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான C.S.கனகரத்தினம் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான க.கு.கந்தையாபிள்ளை -சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரன் (பாலகணேசன் களஞ்சியம் 225, ஆஸ்பத்திரிவீதி, யாழ்.), சாந்தினி (லண்டன்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் (கண்ணன்), ஜெயந்தி, வசந்தி ஆகியோரின் அன்புத் தாயும், சந்தானலட்சுமி, தனராசரத்தினம் (லண்டன்), இலட்சுமணன் (கணபதி அரிசி ஆலை, கிளிநொச்சி), ஸ்ரீதரன் (லலிதா ரெக்ஸ்ரைல்ஸ், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், மகிழ்ராஜன், ஜனனி, வசிகரன், பிருந்தா, தஞ்சுதா, தர்மிதா, கோவர்ணன், தமிழின்பன், கோகுலவாணி, ரிஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது வதிவிட முகவரியில் இன்று (15.04.2013) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**பே. இராஜேஸ்வரன்** (மகன்)
பாலகணேசன் களஞ்சியம்,
225, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P:- 021 490 0005

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.